**தங்காலை நகர சபை**
**ஹம்பாந்தோட்டை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 ஜுன் 17 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2020 ஜுன் 30 திகதியும் சபை முதல்வருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து தங்காலை நகர சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (i) மீளாய்வாண்டின் போது மீண்டுவரும் செலவு ரூபா 126,841 தொகையினை மூலதனச் செலவுகள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | மீண்டுவரும் மற்றும் மூலதன செலவு சரியாக இனங்காணப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சொத்துக்களின் பெறுமதியை அதிகரிக்காத செலவுகளை மீண்டுவரும் செலவுகள் என கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) முன்னைய ஆண்டுகள் தொடர்பாக கிடைத்திருந்த ரூபா 127,923 தொகைக்காக நீதிமன்ற தண்டப்பணம் மீளாய்வாண்டிற் கான வருமானம் ஒன்றெை கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | நீதிமன்ற தண்டப்பணம் சரியான காலப்பகுதிக்கு கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ரூபா 6,250 தொகை முன்னைய ஆண்டுகள் தொடர்பாக காணப்பட்டதுடன் கடன்பட்டோர் என வருமானத் தலைப்பில் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன், ரூபா 121,673 தொகை தொடர்பான கால எல்லை குறிப்பிடப்பட்டிருக்காமையால் மீளாய்வாண்டிற்கான வருமானம் ஒன்றெை கணக்கீடு செய்யப்பட்டது என அறிவிக்கின்றேன். |

**1.4 இணக்கமின்மை**

**1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | | | |
| i. நி.பி. (1)103 | நகர சபையின் தீயணைக்கும் அலகு மற்றும் முன்பள்ளிக்குரிய கூட்டுப்பெறுமதி ரூபா 803,000 தொகைக்கான 05 உபகரணங்களில் காணப்பட்ட பற்றாக்குறை தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். | பற்றாக்குறை என இனங்காணப்பட்டுள்ள பண்ட விடயங்களுக்காக நீதிமன்றத்தினால் விதிக்கப்படும் முறையில் தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன். |
| ii. நி.பி. 134(3) | மீளாய்வாண்டிற்கான உள்ளகக் கணக்காய்வு அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். | 2019 ஆண்டிற்கான 02 உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் மாத்திரம் சமர்பிக்கப்பட்டுள்ளன என அறிவிக்கின்றேன். |
| iii. நி.பி.702(3) | ஒப்பந்த வேலைகள் தொடர்பாக கையொப்பமிடப்படும் உடன்படிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்து இருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். | ஒப்பந்த வேலைகள் தொடர்பாக கையொப்பமிடப்படும் உடன்படிக்கையின் பிரதிகள் எதிர்காலத்தில் கணக்காய்விற்கு சமர்பிப்பேன். |

(ஆ) பொது நிருவாக சுற்றறிக்கை

| | | | | |
|---|---|---|---|---|
| | 2018 ஜனவரி 24 திகதிய 02/2018 இலக்கங் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கை | ஒட்டுமொத்த பதவியணிக்காக வருடாந்த செயலாற்றல் உடன்படிக்கைகள் மற்றும் மனிதவள திட்டம் ஒன்று தயாரித்திருக்க வில்லை. | குறிப்பிட்ட உடன்படிக்கைகள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். | 2020 ஆண்டிற்காக பொது நிருவாக சுற்றறிக்கை 02/2018 இன் பிரகாரம் மனிதவள அபிவிருத்தி திட்டம் ஒன்று தயாரிக் கப்பட்டு செயலாற்றல் உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டுள்ளது என அறிவிக்கின்றேன். |
| (இ) | 2015 ஜூலை 10 திகதி 2/2015 இலக்கங் கொண்ட பொது நிதி சுற்றறிக்கை | 2018 ஆண்டின் போது ஓட்ட நிலையிலிருந்து அகற்றப்பட்டிருந்த ரூபா 4,000,000 பெறுமதி யான டிபர் வண்டியை அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். | குறிப்பிட்ட டிபர் வண்டியை பகிரங்க ஏல விற்பனையில் விற்பனை செய்வதற்கு தேவையான அங்கீகாரத்தை பெறுவதற் காக தென்மாகாண முதலமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது. |
| (ஈ) | பொது நிதித் திணைக் களப் பணிப்பாளர் நாயகத்தின் பீஎப்/ஆர்ஈடீ/சீஓபீஏ/ 2019/01 கடிதம் | வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரித்திருக்கவில்லை. | செயலாற்றல் அறிக்கை வருடாந்தம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். | 2020 ஆண்டு முதல் செயலாற்றல் அறிக்கை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (உ) | உள்ளூராட்சி ஆணையாளரின் (தெற்கு) 2010 திசெம்பர் 27 திகதிய தபபா/ பபாகொ/2010/01 இலக்க சுற்றறிக்கையின் 5 பந்தி | சபைக்குச் சொந்தமான 86 கடைகளின் உடன்படிக்கைகள் நாளதுவரை ஆக்கப்பட்டிருக்காததுடன் நாளாதுவரை ஆக்கப்படாத காலவீச்சு 02 மாதங்கள் முதல் 37 வருடங்கள் இடைப்பட்டதாக இருந்தது. | சுற்றறிக்கையின ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். | 86 கடைகளில் 70 தொடர்பாக தங்காளை பிரதேச சார் உயர் நீதிமன்றில் வழக்கொன்று நடைபெற்றுக் கொண்டிருப்பதுடன் தீர்ப்புக் கிடைத்தவுடன் உடன்படிக்கைகளை நாளதுவரை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் மீதியான 16 கடைகளில் காணப்படும் சிக்கல் காரணமாக உடன்படிக்கை மேற்கொள்ளப்படவில்லை. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 16,424,786 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 15,522,614 தொகை ஆகக் காணப்பட்டது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்க ப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 7,100,000 | 7,124,470 | 6,704,295 | 2,199,238 | 6,200,000 | 6,968,445 | 6,817,032 | 1,355,210 |
| வாடகை | 14,063,000 | 17,296,305 | 13,570,165 | 4,047,062 | 11,709,700 | 10,640,705 | 10,503,241 | 82,459 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 903,000 | 796,529 | 784,528 | 12,000 | 1,153,000 | 891,252 | 891,252 | - |
| ஏனைய வரு மானங்கள் | 21,190,600 | 16,357,196 | 8,162,414 | 24,435,939 | 21,799,500 | 15,244,506 | 14,904,465 | 14,875,983 |
| மொத்தம் | 43,256,600 | 41,574,500 | 29,221,402 | 30,694,239 | 40,862,200 | 33,744,908 | 33,115,990 | 16,313,652 |

#### 2.2.2 வீதிவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 உள்ளவாறு பெறவேண்டிய வீதவரி மற்றும் வரி ரூபா 2,199,238 தொகையினை அறவீடு செய்வதற்கு நகரசபைச் சட்டத்தின் பிரிவு 170 (அ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சட்டத்தின் பிரகாரம் நிலுவை வீதவரி அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலுவை வீதவரி மற்றும் வரி தொகையில் 2020 ஜுன் மாதம் வரை ரூபா 589,087 தொகை அறவிடப்பட்டதுடன் மீதித் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன் என அறிவிக்கின்றேன். |

| | | |
|---|---|---|
| (ஆ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வீதவரி மதிப்பீட்டுப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும் பௌதீக ரீதியாக காணப்படாத 17 ஆதன அலகுகளில் இருந்து பெறவேண்டிய வீதவரி ரூபா 22,227 தொகை ஆகும். | நிலுவை வீதவரியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். | பௌதீக ரீதியாக இனங்காண முடியாதிருந்த 17 ஆதனங்களில் இருந்து பெறவேண்டிய ரூபா 22,227 தொகை மாகாண உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிவித்து பதிவழிக்கப்பட்டதென அறிவிக்கின்றேன். |

**2.2.3 வாடகை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு சபைக்கு சொந்தமான 129 கடையறைகளில் இருந்து பெறவேண்டிய கடை வாடகை ரூபா 3,603,712 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் நிலுவை மீதியில் 02 வருடங்களுக்கும் 05 வருடங்களுக்கும் இடைப்பட்ட மற்றும் 05 வருடங்களுக்கு மேற்பட்ட மீதி முறையே ரூபா 12,750 தொகை மற்றும் ரூபா 14,456 தொகையாகும். | நிலுவை வாடகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். | கடை வாடகை அறவீடு செய்வதற்கு முடியாமைக்கான காரணம் புதிய பெறுமதி மதிப்பீட்டை செயற்படுத்துவதற்கு எதிராக காணப்படும் வழக்கொன்று காரணத்திலாகும். வழக்கு தீர்ப்பு கிடைத்த பின்னர் அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெறவேண்டிய கூட்டுத்தொகை ரூபா 443,350 தொகைக்கான வீட்டு வாடகை, காணிக்குத்தகை, கட்டட வாடகை மற்றும் மீனவர் ஓய்வு விடுதி வாடகை என்பவற்றை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை வாடகை வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவையில் ரூபா 178,160 தொகை அறவிடப்பட்டதுடன் ரூபா 239,750 தொகைக்கான காணி குத்தகை அறவிட முடியாமை மேல் நிதிமன்றத்தில் காணப்படும் வழக்கொன்றின் காரணமாகவேயாகும். மீதித் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 2.2.4 முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 23,764,487 தொகை ஆகக் காணப்பட்டதுடன், அவற்றில் 02 வருடங்கள் மற்றும் 05 வருடங்களுக்கு இடைப்பட்ட மற்றும் 05 வருடங்களுக்கு மேற்பட்ட முறையே ரூபா 16,046,487 தொகை, ரூபா 218,000 தொகை ஆகும். | நிலுவை முத்திரைக் கட்டணம் விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். | 2020 மே மாதம் அளவில் நிலுவையில் இருந்து ரூபா 3,600,000 அறவிடப்பட்டதுடன் மீதித் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

நகர சபை கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

#### (அ) துணை விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| i. நகர சபை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 157 இன் கீழ் 15 பிரதான விடயங்கள் நிறைவேற்றுவதற்காக துணை விதிகள் ஆக்க வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டு இறுதி வரை ஒரு விடயத்திற்காக மாத்திரம் துணை விதிகள் ஆக்கப்பட்டிருந்தது. | துணை விதிகள் ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | மீதியான துணை விதிகளை கடைபிடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| ii. மீளாய்வாண்டின் போது சபை அறவீடு செய்திருந்த 10 வருமான மூலங்கள் தொடர்பாக கட்டணம் விதிப்பது தொடர்பாக வர்த்தமானி அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டிருக்கவில்லை. | கட்டணம் விதிக்கும் போது வர்த்தமானி அறிவித்தல் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். | இந்த வருமான மூலங்களை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்காக சபையின் அங்கீகாரம் கிடைக் காமையால் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படவில்லை என அறிவிக்கின்றேன். |

### (ஆ) செய்பணிகள் நிறைவேற்றுவதில் தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான பாதீட்டில் அடங்கியுள்ள கூட்டுப் பெறுமதி ரூபா 10,975,100 தொகைக்கான 11 அபிவிருத்தி திட்டங்கள் மீளாய்வாண்டின் போது செயற்படுத்தியிருக்கவில்லை. | பாதீட்டில் அடங்கியுள்ள அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக கவனம் செலுத்த வேண்டும். | இந்த அபிவிருத்தித் திட்டங்கள் நிதியம் காணப்படாமை, உள்ளூராட்சித் திணைக்களத்தினால் அங்கீகரித்திருக்காமை மற்றும் பிரதேச செயலகத்தினால் நிறைவேற்றப்பட்டிருந்தமை ஆகிய காரணங்களாகும் என அறிவிக்கின்றேன். |

### (இ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலின் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்கான உலகளாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்தின் பொது மக்களின் வாழ்க்கைத் தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட காலத் திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை அறவீடு செய்வதற்கான சுட்டிகள் இனங்கண்டு அதன் பிரகாரம் வருடாந்த இலக்குகளை நெருங்கும் முன்னேற்றத்தை அளவீடு செய்ய வேண்டும். | இது தொடர்பாக முறையான வழிகாட்டல் மற்றும் பயிற்சி ஒன்று கிடைக்காமையால் ஆக்கபூர்வமாக தயாரிப்பதற்கு முடியவில்லை என அறிவிக்கின்றேன். |

## 3.2 முகாமைத்துவ திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கறைநிரல் படுத்தப்பட்டிருந்த 06 ஒப்பந்தக்காரர்கள் தொடர்பாக ரூபா 130,000 தொகைக்கான கேள்வி பிணை வைப்புக்கள் மீளாய்வாண்டு இறுதி வரை வைப்புக்கள் என தடுத்து வைக்கப்பட்டிருந்தது. | கேள்வி பிணை வைப்புக்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 3.3 மனித வள முகாமைத்துவம்

### (அ) ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பதவியணித் திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் காணப்பட்ட 22 வெற்றிடங்களை நிரப்புவதற்கும் 28 மிகை பதவிகளை முறைப்படுத்து வதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதவியணியில் மிகைப் பதவிகளை முறைப் படுத்துவதற்கும் வெற்றிடங்களை நிரப்புவதற்கும் செய்யப்பட வேண்டும். | 28 மிகை உத்தியோகத் தர்களில் 17 தொகை 25/2014 சுற்றறிக்கையின் மீது சேர்க்கப்பட்டிருந்ததுடன், 22 வெற்றிடங்கள் காணப்பட்ட போதிலும் அவற்றில் 08 இற்காக ஆட்சேர்ப்பதற்குரிய அதிகாரம் சபைக்கு காணப்படாததுடன், ஒரு வெற்றிடம் நிரப்பப்பட்டதுடன், மீதியை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### (ஆ) ஊழியர் கடன்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டு இறுதியளவிலும் இறந்த உத்தியோகத்தர் இருவரிடம் பெறவேண்டிய விழா மற்றும் இடர்கடன் கூட்டுத்தொகை ரூபா 51,135 ஆகும். | ஊழியர் கடன்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த உத்தியோகத்தர்கள் 10 வருட சேவையை பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர் களாக இருந்ததுடன், அறவீடு செய்ய முடியாமையினால் பதிவழிப்பதற்காக உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரத்துக் காக அனுப்பப்பட்டுள்ளது என அறிவிக்கின்றேன். |

## 3.4 செயற்பாட்டுத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| அங்கீகரிக்கப்பட்ட கட்டட வரைபுகளின் கால நீடிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்காத சந்தர்ப்பங்களில் ஆதன உரிமையாளர்களை அறிவுறுத்துவதற்கு மற்றும் நிர்மாண வேலையை பூர்த்தி செய்யாத கட்டடங்களுக்காக குடிபுகு சான்றுகள் பெற்றுக் கொள்வதற்காக முறையான வேலைத்திட்டம் ஒன்று தயாரித்திருக்கவில்லை. | குடிபுகு சான்றுகள் பெற்றுக்கொள்வதற்காக முறையான வேலைத்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டும். | ஒரு வருடத்தில் பூர்த்தி செய்யப்படாத நிர்மான வேலைகளுக்காக கால நீடிப்பு பெற்றுக்கொள்ளும் படியும், பூர்த்தி செய்யப்பட்ட நிர்மாண வேலைகளுக்காக குடிபுகு சான்றுகள் பெற்றுக்கொள்ளும் படியும் ஆதன உரிமையாளர் களுக்கு அறிவிக்கப்பட்டதுடன், 2017 முதல் 2019 வரை அங்கீகரிக்கப்பட்டிருந்த வரைபுகளுக்காக 2020 ஆண்டின் போது நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டது என அறிவிக்கின்றேன். |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 விளைவற்ற மற்றும் குறை பயன்பாட்டுச் சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபைக்குச் சொந்தமான கூட்டுப்பெறுமதி ரூபா 1,187,000 தொகைக்கான 07 காணிகள் மற்றும் கட்டடங்களை ஆக்கபூர்வமான கருமங் களுக்காக பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை. | சபைக்குச் சொந்தமான சொத்துக்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். | 04 காணிகளின் உரிமை சபைக்குச் சொந்தமாக காணப்படாததுடன், 02 காணிகள் பாதை அபிவிருத்தியின் போது பாதைக்கு பயன்படுத்தப் பட்டிருந்ததுடன், மீதிக் காணியை வாகனங்கள் நிறுத்துவதற்காக பயன்படுத்தப்படுகின்றன என அறிவிக்கின்றேன். |